එච්. එම්. විජිත හේරත්, පා. ම.
எச். எம். விஜித ஹேரத், பா. உ.
H. M. Vijitha Herath, M. P.

විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍ය
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்
Minister of Foreign Affairs, Foreign Employment and Tourism

**2025 ஏப்ரல் 14**

நாம் அனைவரும், சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டைக் கொண்டாடும் இவ்வினிய வேளையில், இலங்கையிலும் உலகெங்கிலும் வாழும் அனைத்து மக்களுக்கும் எனது அன்பான புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு சமூகங்களால் கொண்டாடப்படும் இந்தப் புதுப்பித்தல் பருவமானது, ஒற்றுமை, சகவாழ்வு மற்றும் பகிரப்பட்ட கலாச்சார விழுமியங்களின் உணர்வைப் பிரதிபலிக்கிறது. நாட்டு மக்கள் தத்தமது, தனித்துவமான மரபுகளில் வேரூன்றியிருந்தாலும், புத்தாண்டு, ஒற்றுமையுடன் கொண்டாடப்படுகின்றமை எமது பன்முக சமூக வலிமையைக் காட்டுகிறது.

உலக சமூகமானது, அதிகரித்து வரும் பிளவு மற்றும் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளும் வேளையில், இந்த அமைதியான சகவாழ்வு உணர்வு மிகச்சரியானதொரு நேரத்தில், சக்திவாய்ந்ததொரு செய்தியை பறைசாற்றுகிறது. நாடுகளுக்குள்ளும், அவற்றுக்கிடையேயும் உரையாடல், பரஸ்பர மரியாதை மற்றும் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை இத்திருநாள் எமக்கு நினைவூட்டுகிறது.

சர்வதேச சமூகத்துடனான ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்கும், வெளிநாட்டில் வாழும் எமது மக்களின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை ஆதரிப்பதற்கும், இலங்கையை அமைதி, விருந்தோம்பல் மற்றும் கலாச்சார செழுமையின் தலமாக மேம்படுத்துவதற்கும் நமது அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

இவ்வினிய புத்தாண்டு அனைவருக்கும் புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை, சௌபாக்கியம் மற்றும் புரிதலைக் கொண்டுவரட்டுமாக.

සුබ නව වසරක් වේවා!
இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
Happy New Year!

**எச்.எம்.விஜித ஹேரத், பா.உ.**
வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

කාර්යාලය/அலுவலகம்/Office: +94-11-2430221, +94-11-2445498 ෆැක්ස්/பெக்ஸ்/Fax No. : +94-11-2430222
වෙබ් අඩවිය/வலைத்தளம்/Website: www.mfa.gov.lk - ඊමේල්/மின்னஞ்சல்/Email: fmo@mfa.gov.lk
විදේශ කටයුතු, විදේශ රැකියා සහ සංචාරක අමාත්‍යාංශය, ජනරජ ගොඩනැගිල්ල, කොළඹ 01, ශ්‍රී ලංකාව
வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, குடியரசுக் கட்டிடம், கொழும்பு 01, இலங்கை.
Ministry of Foreign Affairs, Foreign Employment and Tourism, Republic Building, Colombo 01. Sri Lanka.